கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு - 11.

பேராசிரியர் மருத்துவ கலாநிதி

# அ. சின்னத்தம்பி அவர்கள் நினைவுப் பேருரை



பேராசிரியர் கலாநிதி

சு. வித்தியானந்தன் அவர்கள்

துணைவேந்தர் யாழ். பல்கலைக் கழகம்,

திருநெல்வேலி.

கொழும்புத் தமிழ்ச்சங்க நிலையம்

உருத்திரா மாவத்தை,

கொழும்பு-6.

கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு - 11.

பேராசிரியர் மருத்துவ கலாநிதி

# அ. சின்னத்தம்பி அவர்கள் நினைவுப் பேருரை

பேராசிரியர் கலாநிதி
சு. வித்தியானந்தன் அவர்கள்
துணைவேந்தர் யாழ். பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திற்கு அன்பளிப்பாக
இந்நூலை வழங்கியவர்

கொழும்புத் தமிழ்ச்சங்க நிலையம்
உருத்திரா மாவத்தை,
கொழும்பு-6.



பேராசிரியர் மருத்துவ கலாநிதி

**அ. சின்னத்தம்பி அவர்கள்**

இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை

## மகப்பேற்று

## மருத்துவ நூல் மாண்பு

(நூல் வெளியீட்டு விழாவின் போது வழங்கப் பெற்ற பாராட்டுப் பாக்கள் 5-5-1970)

மகப்பேறு பற்றி மருத்துவநூ லொன்று
செகப்பேறீ தாமாறு செய்தார் - உகப்பேறு
பேரா சிரியர் பெரியார்சின் னத்தம்பி
ஆரா வமுதமிது வாம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

மக்கள் மகப்பேற்று மாதர் மருத்துவநூல்
திக்கறியத் தந்துரைத்தான் செந்தமிழில் தக்கோன்
திசைமெச்சும் டாக்டர்சின் னத்தம்பிப் பேரான்
இசைவிளங்க எண்ணென்றும் எண்.

க. குழந்தைவேல்,
கரவெட்டி.

கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு

பதிப்புரிமை பெற்றது

றெயின்போ அச்சகம் - கொழும்பு - 13

செப்தெம்பர் 1987

Professor DR. SINNATHAMBY

Memorial Speech.

by

Professor S. VITHIANANTHAN

Vice Chancellor

University of Jaffna.

2—11—1986

Colombo Tamil Sangam

# பதிப்புரை

பேராசிரியர் மருத்துவ கலாநிதி அ. சின்னத்தம்பி அவர்கள் இலங்கையிற் தோன்றிய அறிஞர்களுள் ஒருவராகப் போற்றுதற்கு உரியர். இப்பெரியார் தமிழ் மொழிக்கும் சமயத்திற்கும் சமுகத்திற்கும் நாட்டுக்கும் தமிழ்ப்பல்கலைக் கழக இயக்கத்திற்கும் கல்வித்துறைக்கும் அரும் பணிகள் ஆற்றினர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் தொடங்கிய காலம் முதல் சங்கத்தொடு தொடர்பு உள்ளவர் துணைத்தலைவராகவும் காப்பாளருள் ஒருவராகவும் விளங்கியவர். சங்கத்தைப் பதிப்புத்துறையல் ஈடுபடுத்தியவர். இவரது தூண்டுதலினாற் பாவலர் சரித்திர தீபக நூலைச் சங்கம் வெளியிட்டது. இவரது மகப்பேற்று மருத்துவநூல் வெளியீட்டுவிழா சங்க ஆதரவில் சரசுவதி மண்டபத்தில் நிகழ்ந்தது. பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், ஏ. எம். ஏ. அசீஸ், பேராசிரியர் சு. வித்தியானந்தன், சி. இலக்குமண ஐயர், அ. வி. மயில்வாகனம், மருத்துவ கலாநிதி த. குமாரசாமி ஆகியவர்கள் உரை நிகழ்த்தினர் தாம் எழுதிய நூல்களைச் சங்க நூலகத்திற்கு வழங்கினார்.

இவர் அமரராகிய போது அஞ்சலி செய்தற்கும். இவர் ஆற்றிய பணிகளை உலகிற்கு உணர்த்தற்கும் நினைவுப் பேருரை நிகழ்ச்சி நிகழ்த்தச் சங்க ஆட்சிக்குழு தீர்மானித்தது. இவரொடு பல்கலைக் கழகத்திற் பணியாற்றியவரும் அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றவரும் ஆகிய யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு, வித்தியானந்தன் அவர்கள் சங்கத்தின் விருப்பத்தை உவந்து ஏற்று 21-1-1986 ஆம் நாள் தமிழ்ச் சங்க நிலையத்தில் இந்நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் வைத்தியகலாநிதி அவர்களின் உறவினர்களும் இவரிடம் பயின்று மருத்துவத்துறையிற் கலாநிதிகளாக விளங்குபவர்களும் சங்க உறுப்பினர்களும் அறிஞர்களும் பங்கு பற்றினர்.

துணைவேந்தர் நிகழ்த்திய நினைவுப் பேருரை வைத்திய கலாநிதி அவர்களின வரலாற்றையும் பணிகளையும் விரிவாக விளக்குஞ் சிறப்பினதாக இருந்தது. இப்பேருரையை நூலாக வெளியிடுதல் பயன் தரும் எனப் பலர் கருத்துத் தெரிவித்தனர். இதனைச் சங்க ஆட்சிக்குழு வைத்திய கலாநிதி அவர்களின் துணைவியாருக்குத் தெரிவித்தது. இந்நினைவுப்பேருரை நூலாக்கத்திற்கான நிதியை மருத்துவ கலாநிதி அவர்களின் குடும்பத்தினர்க்காக இப்பெரியாரின் மருகரும் இலங்கை உள்ளூராட்சி வீடமைப்பு நிருமாணத்துறை அமைச்சுச் செயலாளரும் ஆகிய திரு. இ. பாஸ்கரலிங்கம் அவர்கள் வழங்கினார்கள்.

திட்பநுட்பம் உள்ள செம்மை சான்ற இந்நினைவுப் பேருரையைச் சிறப்பாக நிகழ்த்திய தமிழ் கூறும் நல்லுலகின் நல்லறிஞர் துணைவேந்தர் அவர்களுக்கும் நூலாக்க நிதியை உதவிய மருத்துவ கலாநிதி அவர்களின் குடும்பத்தினருக்கும் இந்நூலைச் செவ்விய முறையில் அச்சிட்டுத் தந்த கொழும்பு றெயின்போ அச்சக முகாமையாளருக்கும் சங்கம் மிக மேலான நன்றியைத் தெரிவிக்கின்றது.

மருத்துவ கலாநிதி அவர்களின் அரும்பணிகள் இவ்வுலகிற்குத் தொடர்ந்து நிலைபெறுதற்கு இந்நூல் வழிவகுக்கும் எனச் சங்கம் உறுதியாக நம்புகிறது.

சங்க அகம்
7, 57 ஆம், ஒழுங்கை,
கொழும்பு-6.
1-7-1987

க. இ. க, கந்தசுவாமி
கௌரவ பொதுச்செயலாளர்



பேராசிரியர் மருத்துவ கலாநிதி
அ. சின்னத்தம்பி அவர்களின்
உருவப்படத்தை நினைவுப்பேருரையின் போது (2-11-1986)
கொழும்புத் தமிழ்ச்சங்க நிலையத்தில் யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
பேராசிரியர் க. வித்தியானந்தன் அவர்கள் திரை நீக்கஞ்செய்தல்.
அருகில் நிற்பவர் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. து. திருமலராசா அவர்கள்

## மகப்பேற்று மாதர்நோய் மருத்துவத்துறைப் பேராசிரியர் வைத்தியக் கலாநிதி

# அப்பாக்குட்டி சின்னத்தம்பி நினைவுப் பேருரை

## தோற்றம் 7.9.1911 மறைவு 1.3.1986

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மகப்பேற்று மாதர் நோய் மருத்துவத்துறை நிபுணரும், அத்துறைப் பேராசிரியரும், இந்நாட்டின் மருத்துவத் துறைக்கும் கல்வி கலாசார வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்புச் செய்தவரும், மருத்துவக் கல்வியைப் பல்கலைக்கழக மட்டமளவிலே தமிழ் மூலம் கற்பதற்குரிய நூல்களை வெளியிட்டவரும், எல்லோரின் மதிப்பையும் பெற்ற சமய சமூகத் தொண்டனுமாகிய அமரர் வைத்தியக் கலாநிதி பேராசிரியர் அப்பாக குட்டி சின்னத்தம்பி அவர்கள் நினைவுப் பேருரை நிகழ்த்துவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

கடந்த 36 ஆண்டுகள் காலமாக என்னுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவரும், என்னுடைய நன்மதிப்பைப் பெற்றவருமாகிய பேராசிரியர் பற்றிய நினைவுகளை இங்கு எடுத்துரைப்பதற்கு எனக்கு உரிமையுண்டு என் பதனைக் கூற விரும்புகின்றேன் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் தகப்பனார், நாகமுத்து சின்னத்தம்பி அப்பாக்குட்டி என்பவர். தாயார் தெய்வானைப்பிள்ளை ஆவார். இவருக்கு வயது இரண்டாகவிருந்த பொழுது தகப்பனாரை இழந்து விட்டார். எனவே தாயின் அரவணைப்பிலேயே இவரின் வாழ்க்கை அமைந்தது. தாயாரின் தெய்வ பக்தியும், சேவை மனப்பான்மையும், பணிவும், அடக்கமும் இவரிடம் காணப்பட்டமை தாயாரின் செல்வாக்கு எவ்வளவிற்கு அமைந்திருந்ததென்பதனைக் காட்டுகின்றது. இவர் சிறு வயதிலிருந்தே மருத்

துவத் துறையில் ஈடுபட வேண்டுமென்று தாயார் வற்
புறுத்தி வந்தார். தமது மூதாதையர் லோகநாதபிள்ளை
தாமோதரம்பிள்ளை (1830-1905) பிறந்த ஊரை விட்டுக்
கண்டி மாநகர் சென்று அங்கு பெரிய சித்த வைத்திய
ராகத் தொழில் செய்து வந்ததுடன் பல சமூகத்
தொண்டுகளிலும் ஈடுபட்டுப் பலரின் அன்பையும் மதிப்
பையும் பெற்றிருந்தார். கடைசிக் காலத்தில் அவர்,
சொந்த ஊராகிய மானிப்பாய்க்குத் திரும்பி வந்து
தனது சகோதரி முறையான முதலித்தம்பி மகள் பார்
வதிப்பிள்ளையுடன் வாழ்ந்து, மருத்துவத் தொழிலும்
செய்து வந்தார். "அவரைப் போல நீயும் ஒரு பிரபல
வைத்தியராய் வரவேண்டும். ஊரில் நோயால் வாடும்
மக்கள் கொஞ்ச நஞ்சமல்ல காசு உழைப்பது மாத்திரம்
பெரியதன்று. சேவை மனப்பான்மையாய் இரு" எனும்
தாயாரின் கட்டளை கடைசி வரை பேராசிரியரின் மனதை
என்றும் விட்டகலவில்லை. வாழ்க்கையின் பின்பகுதியிலே
யாழ்ப்பாணத்திலே பிறவுண் ரேட்டில் இவர் வாழ்ந்து
வந்த காலத்திலே காலைக்கடன் முடிந்தவுடன் தாயின்
படத்திற்கு மலரிட்டுத் தாயை வணங்கிய பின்னரே,
தனது கருமங்களைக் கவனிப்பார்.

உயர்திரு. விபுலானந்த அடிகள் துறவு பூணுவதற்கு
முன் தலைமை ஆசிரியராகவிருந்த மானிப்பாய் இந்துக்
கல்லூரியிலே இவரது ஆரம்பக் கல்வி தொடங்கியது.
கல்லூரியிற் படிக்கும் பொழுது தியத்தலாவைப் பயிற்சி
யளிக்கும் முகாமில் அணி வகுத்து, இலங்கைத் தேசாதி
பதியை வரவேற்கும் ஒரு வைபவத்தில். மற்ற எல்லா
மாணவர்களும் வந்து நின்று அமைச்சர்களாகவிரும்புகின்
றோம், நிருவாகத் தலைமை வகிப்போம் எனத்தேசாதி
பதக்குக் கூறிய பொழுது இவர் மாத்திரமே வைத்திய
ராக வரவிரும்புகின்றேன் என்று கூறினார். தாயாரின்
விருப்பம் அவரது உள்ளத்திற் குடி கொண்டு விட்டது.

பேராசிரியர் அவர்களுக்கு மூன்று சகோதரர்களும்
ஒரு சகோதரியும் உளர். அவர் தனது உடன் பிறந்த
தவர் எல்லோரும் தனது அபிமானத்துக்குரிய வைத்தியத்
தொழிலுக்குத் தங்கள் பிள்ளைகளை அர்ப்பணித்திருக்கிறார்
கள் என்று பெருமைப்படுவார். அவரின் இளமைப்பரு
வத்தில் அவரது பாதுகாவலனாகவும், மேற்பார்வை
யாளனாகவுமிருந்த மூத்த தமையன், புகையிரதப் பகுதி
யிற் கடமையாற்றிய சுப்பிரமணியமாவார். இவரின் இரு



பெண் பிள்ளைகளாகிய ஜெகதாம்பிகையும், சர்வாம்பிகை
யும், ஆண் பிள்ளையாகிய சர்வானந்தனும் மருத்துவத்
தொழிலிற் சிறந்த மருத்துவர்களாக விளங்குகிறார்கள்.
இரண்டாவது மூத்த சகோதரன், இளைப்பாறிய கணக்கா
ளர் நாகலிங்கம் ஆவார். அவரின் இரு ஆண் பிள்ளைகளுள்
காலஞ்சென்ற சிவானந்தன் அவர்கள் மருத்துவத் துறை
யில் உயர் பட்டம் பெற்றவர். இரண்டாவது மகன்
விவேகானந்தன் சுகாதார சேவை வைத்தியராவார்.
மூன்றாவது மூத்த தமையன் குமாரசாமி தந்திக்
கந்தோரில் பொறியியலாளராகவிருந்தார். இவரின்
இரு ஆண் பிள்ளைகள் மருத்துவர்கள். கிருஷ்ணானந்தன்
என்பவர் அமெரிக்காவிலும், சிவதாசன் என்பவர் சிங்கப்
பூரிலும் வைத்தியத் துறையில் உயர் உத்தியோகம் வகிக்
கிறார்கள். இவரின் சகோதரி தங்கரத்தினத்தின் மகள்
சீதாதேவியும் வைத்தியத் தொழிலில் அமர்ந்திருக்கிறார்.
பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களின் கடைசி மகள்
சிவமதி மருத்துவத் தேர்விற் சிறப்புடன் சித்தியடைந்த
ஒருவராவார். மேலே கூறியவற்றிலிருந்து பேராசிரியரின்
ஆளுமை அவர் சகோதரர்களின். பிள்ளைகளில் எவ்வாறு
பதிந்திருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியிற் பயிற்சி முடிந்ததும்
அங்கிருந்து சிரேஷ்ட ஆளுநர் புலமைப் பரிசில் பெற்று,
கொழும்பு றோயல் கல்லூரியிற் படிக்கும் வாய்ப்பினைப்
பெற்றார். அங்கிருந்து இலங்கை மருத்துவக் கல்லூரியிற்
சேர்ந்த அவர், 1935ஆம் ஆண்டு L M.S, தேர்வில்
முதலாம் வகுப்பிலே தேறிச் சிறப்புப் பட்டம் பெற்றுச்
சிலகாலம் ஈழத்தின் பல இடங்கிலும் மருத்துவத் துறை
யிற் சிறந்து விளங்கினார். மேற் படிப்பிற்கு மேல் நாடு
செல்ல முன்னர் யாழ்ப்பாணத்தில் பிரபல வழக்கறிஞ
ராகவிருந்த ஆர். ஆர். நல்லையா அவர்களின் ஒரேயொரு
மகளாகிய லீலா தேவியை மணமுடித்தார். இவர்களின்
பிள்ளைகள் முறையே வசந்தி, மாலினி, கணேஸ்வரன்,
சிவமதி, கேதீஸ்வரன் ஆவார்கள். இவரின் மூத்த மகள்
வசந்தி உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராகிய பாஸ்
கரலிங்கம் அவர்களையும், இரண்டாவது மகள் மாலினி
சிங்கப்பூர்ப் பல்கலைக் கழகத்திற் பணி புரியும் பொறி
யியலாளர் கணேசலிங்கம் அவர்களையும் மணமுடித்திருக்
கிறார்கள், மூத்த மகன் கணேஸ்வரன் ஒரு கணக்காளர்.

தனது குடும்பத்தாருடன் சவூதி அரேபியாவிற்குச்சென்று அங்கு பணி புரிகின்றார். கடைசி மகன் கேதீஸ்வரன் ஒரு மாணவனாவார்.

1646ஆம் ஆண்டில் பட்டப்பின் படிப்பின்பொருட்டு இங்கிலாந்து சென்று அங்கு "F. R, C. S. (Edin.), F. R C. S. C. (Eng ) M. R. Cog. Gr. Britan." ஆகிய தகைமைகளைப் பெற்று 1949இல் நாடு திரும்பினார். இத்தகைய தகைமைகளைப் பெறறு 1949இல் நாடு திரும்பிய இரண்டாவது இலங்கையர் இவரே. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் எஸ். ஆர். நிக்கலஸ் ஆட்டிகல அவர்களே இத்தகைமைகளைப் பெற்ற முதலாம் இலங்கையராவார். ஐக்கிய இராச்சியதலிருந்து நாடு திரும்பிய பின்னர் கொழும்பு பொது வைத்தியசாலையில் மாதர் நோய் மருத்துவராக நியமிக்கப்பட்டார். 1954ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக மகப்பேற்று, மாதர் நோய் மருத்துவத்துறை இணைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1965இல் இரண்டாவது மருத்துவ பீடத்தின் சிகிச்சைத்துறை பேராதனையில் நிறுவப்பட்ட பொழுது மகப்பேற்று மாதர் நோய் மருத்துவத்துறையின் முதலாம் பேராசிரியராக அவர் நியமிக்கப்பட்டார் 1967ம ஆண்டு 56ம் வயதில் தொடர்ந்து பேராசிரியராகக் கடமையாற்ற விரும்பாது ஓய்வு பெற்றார்.

கொழும்பிலும் பேராதனையிலும் இவரிடம் கற்றவர்களே பெயர் பெற்ற மருத்துவர்களாக, ஈழத்திலும் உலகின் பல பாகங்களிலும் சிறந்த மருத்துவ நிபுணர்களாகக் கடமையாற்றுகின்றார்கள். மகப்பேற்று மருத்துவ நிபுணராக இவர் விளங்கிய காரணத்தினாலே சுகமாகப் பிரசவம் ஏற்படுவதற்குப் பல தமிழ், சிங்கள, முஸ்லிம் கர்ப்பவதிகள் இவரிடம் சிகிச்சைக்குச் சென்றனர். பல்லாண்டு மகப்பேறின்றிவருந்தியவர்கள் இவரது ஆலோசனைகளைப் பெற்று மகப்பேற்றை அடைந்ததை நானறிவேன். அறுவைச் சிகிச்சையில் இவருக்கு நிகராக வேறொரு மகப்பேற்று மருத்துவரும் இல்லையென்றுகூறலாம். 1982ம் ஆண்டிற்குப் பின் தளர்ச்சியேற்பட்டிருந்த போதும் அறுவைச் சிகிச்சை செய்து வெற்றி கண்டதை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மருத்துவ மனையில் அவரிடம் சிகிச்சை பெற்றவர் அறிவார்கள். கை நடுக்கம் இருந்தாலும், சிகிச்சைக்குரிய கருவிகளைக் கையில் எடுத்ததும், நடுக்கமின்றி அறுவைச் சிகிச்சை செய்வதைப் பலர் கவனித்து வியப்படைந்திருக்கின்றனர். அறுவைச் சிகிச்சை மட்டுமன்று. மற்றும் சிக்கலான மகப்பேறுகளையும் அவர் வெற்றியுடன் செய்து முடித்தார்.



மாணவருக்கு அவர் மருத்துவ மனைகளிற் பாடம் சொல்லிக் கொடுப்பது பற்றிப் பல சுவையான நிகழ்ச்சிகளை அவரின் மாணவர்கள் என்னிடம் கூறியிருக்கின்றனர். அவர் பேராதனையிற் பேராசிரியராக இருந்தபோது பேராசிரியர் வரகுணன் அவர்களைச் சந்திப்பதற்குக் கண்டி வைத்தியசாலைக்குச் சென்றிருந்தேன் போகும் வழியல் மகப்பேற்று மருத்துவ வாட்டில் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் மாணவர்களுக்கு வகுப்பு நடத்திக்கொண்டிருந்தார். நான் அப்பக்கமாகப்போவதைக் கண்டதும் 'வித்தியானந்தன் இங்கே வாரும்' என்று அழைத்தார். அப்போது ஒரு தமிழ் மாணவனை ஏதோ கேள்வி கேட்டபோது, அவர் பிழையாக மறுமொழி சொன்னதால், என் முன்னிலையில் அம்மாணவனுக்குக் குட்டொன்று போட்டு, 'நீ ஒரு தமிழனா, மொக்கு' என்று கூறினார். நான், அவ்விடம் விட்டகன்ற பின் அவர் சில வேளைகளிற் தனது மாணவர் மத்தியிற் பிற இனத்தவரும் இருப்பதை மறந்து, தமிழில் அவர்களை வழிப்படுத்தியதை அறியக்கூடியதாகவிருந்தது. மாணவர் சரியான பயிற்சி பெற வேண்டுமென்பதற்காக இப்படி அவர் நடந்து கொள்வதுமுண்டு. சக பேராசிரியர்களும், அவர்மேல் அபிமானமுள்ள மாணவரும் அவரை அன்புடனும், நன்றியுடனும் 'சின்னா' என்று வாரப்பாட்டுடன் குறிப்பிடுவர்.

அடுத்து விதந்து கூறப்படுவது அவர் மருத்துவத் துறையிலே தமிழிலே தாமாக எழுதியும் மொழி பெயர்த்தும் வெளியிட்ட நூல்களாகும். பல்கலைக் கழகங்களின் போதனாமொழி தேசிய மொழிகளாக அமையவேண்டுமென்று சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் கொழும்புப் பிரசவ பெரிய வைத்தியசாலையிற் கடமையாற்றும் போது 20-12-1949இல் 'அயனந்த தேச நோய் நூல்' (Tropical Medicine) என்ற நூலை வெளியிட்டுத் தனக்கு அறிவூட்டியவரும், மருத்துவத் தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியவரும், பலவகையிலும் தனக்குச் சமயப் பற்றும் சேவை மனப்பான்மையும் போதித்த தனது அன்னைக்கு அர்ப்பணித்தார். அவர் சிறுவனாக இருக்கும் பொழுது தாயின் கட்டளைப்படி வயல்களின் ஊடாக விடியற்காலையில் வேலைக்கப்பிள்ளை

யார் கோயிலுக்குச் சென்று, மணி அடித்துச் சமயத் தொண்டு செய்வதுண்டு. இவ்வாறு தம்மை வழிப்படுத்திய அன்னையாருக்கு முதல்நூலை அர்ப்பணித்தது அவர் தனது தாயாருக்குச் செய்த நன்றிக் கடனாகும்.

ஈழத்திலுள்ள மக்களுக்கும், அவர்களுக்கு அறிவூட்டுவதற்காகவும் நோயற்று வாழ்வதற்குத் துணையாகவும் நியமிக்கப்பட்ட வைத்திய சுகாதார உத்யோகத்தர்களுக்கும், முறையே நோய்களைப் பற்றிய அறிவைத் தமிழிலே மக்களுக்கும் புகட்டுவதற்கும் துணையாகுமென்ற நோக்குடன் இந்நூல் இயற்றப்பட்டது. அவர் தமது முகவுரையிற் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

"தமிழர்கள் இந்தியா, ஆபிரிக்கா, புலுமா, மலாயா, பீஜி முதலிய தேசங்களில் வசிக்கின்றனர், இலங்கையிலும் யுத்தத்தின் நிமித்தம் பல கூட்டத்தினர் வசித்ததின் காரணத்தினாற் புதுப்புது நோய்கள் தோன்றக் கூடும். போக்குவரவு வசதிகள் அதிகர்த்தபடியாற் பிற தேசங்களிலிருந்து புது நோய்கள் வரக்கூடுமென்றுஇச்சிறு நூலில். முக்கியமாக இலங்கையிலும், இந்தியாவிலும் காணப்படும் நோய்கள் விபரிக்கப்பட்டுள்ளன"

இந்நூல் பற்றிக் குறிப்பிட வேண்டியதொன்றுண்டு. தாய்மொழி மூலம் எல்லாத் துறைகளையும் சார்ந்த கல்வி புகட்ட வேண்டுமென்ற சட்டம் வருவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே, 1949ஆம் ஆண்டில், அவர் வைத்திய நூலொன்றினைத் தமிழில் எழுதி அச்சிட்டிருக்கின்றார். தமிழ் புறக்கணிககப்பட்ட அக்காலத்திலே, அவர் வெளியிட்ட 'அயனுந்த தேச நோய் நூல்' என்ற பெயருடைய இந்நூல் அவரின் தீர்க்க தரிசனத்திற்கும் மனித அபிமானத்திற்கும் போதிய சான்றாகும்.

மேன்மைக் கலைகள் தமிழின் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை – அவை
சொல்லுந் திறமை தமிழ் மொழிக்கில்லை

என்று ஒரு பேதை தமிழ்த் தாயிடம் கூறினளாம். அப்போது பாரதி கண்ட அத்தமிழ்த்தாய்,

கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்
தந்தை அருள் வலியாலும் - இன்று
சார்ந்த புலவர் தவ வலியாலும்



ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்

எனக் கூறினன்.

மேன்மைக் கலைகள் தமிழில் உண்டு என்பதும், அவற்றைக் கூறும் ஆற்றல் தமிழருக்குண்டு என்பதும் பாரதி குறிப்பிடும் பேதைககுத் தெரியாது. பாரதி பிறந்தது 1882ம் ஆண்டு அவர் பிறப்பதற்கு 26 ஆண்டுகளுக்கு முன்னரே ஈழத்திலே அறிவியற்றுறைகள் பலவற்றிலே தமிழ் நூல்கள் பல வெளிவந்து விட்டன. 1856ம் ஆண்டிலே மானிப்பாய் வைத்திய நிலையத்தைச் சார்ந்த கிறீன் என்பவர் 'உடற் கூறும் உடல் நலமும்' என்ற வைத்திய நூலைத் தமிழில் எழுதினர். அவருடைய மாணக்கர்களாகிய ஈழத்துத் தமிழர்களாகிய டன்போது, எவாட்சு போன்றவர்கள் இரண வைத்தியம், அங்காதிபாதம். வைத்தியாகரம், இந்து பதார்த்தசாரம் போன்ற வைத்திய நூல்களை எழுதி வெளியிட்டனர். கெமிஸ்தம், வீசுகணிதம் போன்ற அறிவியல் நூல்களும் பாரதி பிறப்பதற்கு முன்னரே தமிழில் வெளிவந்தன. இவையாவும் ஈழத்திலே எழுதப்பட்டவை. மேன்மைக்கலைகளைக் கூறும் நூல்கள் தமிழிலே ஈழத்தில் எழுதப்பட்டனவென்பது பாரதி குறிப்பிட்ட பேதைக்குத் தெரியாது. காரணம், தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்கு இத்தகைய நூல்கள் ஈழத்திலே தமிழில் எழுதப்பட்டனவென்பது பரவலாகத்தெரியாததாகும்.

இவை யாவும் மானிப்பாய் என்னும் ஊரை மையமாகக்கொண்டு வெளி வந்தவை. அறிவியற்றுறை நூல்களைத் தமிழில் ஆக்கித் தருவதில் மானிப்பாய் வரலாற்று முக்கியம் வாய்ந்தது. அந்த ஊரைத் தம் பிறப்பகமாகக் கொண்ட பேராசிரியர் அ சின்னத்தம்பி அவர்கள் மானிப்பாய்த் தொண்டினைத் தொடர்ந்து செய்து 'அயனுந்த தேசநோய் நூல்' என்பதனை 1949ம் ஆண்டில் வெளியிட்டமை மானிப்பாய் வைத்தியர் தொண்டின் தொடர்ச்சியாகும்.

தாய்மொழி மூலம் சகல துறைகளிலும் உயர்தரக் கல்வி புகட்டப்பட வேண்டுமென்ற அரசியற் சட்டம் அமுலுக்கு வந்தபோது, சில பேராசிரியர்கள் மருத்துவத் துறையில் இதனை ஆதரித்தனர். ஆனல் அவர்கள் இத்துறையிற் செயற்படவில்லை. பேராசிரியர் சின்னத்

தம்பி அவர்களே இதனைச் செயல் முறையிற் சாதித்துக் காட்டியிருக்கின்றார். அவர் மருத்துவத் துறையிலே பல நூல்களைத் தாமே தமிழில் எழுதி வெளியிட்டும் சில ஆங்கில மருத்துவ நூல்களைத் தமிழில மொழி பெயர்த்தும் வெளியிட்டும் இருக்கின்றார். பலர் சேர்ந்தே, நிறுவன நீதியாகவோ, அரசாங்கமோ செய்ய முடியாதவற்றைத் தனிமனிதனாகிய தான் செய்து முடித்ததன் மூலம் ஈழத்துத் தமிழரின் தமிழ்க் கல்விப் போதனைத் துறையில் அவர் தந்த படைப்புக்கள் தனியொருவரின சாதனைக்குச் சிறப்பான எடுத்துக் காட்டுகளாக அமைகின்றன. இந்தத் துறையிலே அவர் செய்த பணிகள் பிறரினாற் செயற்படுத்த முடியாதவையாக அமைகின்றனவென்பது குறிப்பாகக் கூட்டப்பட வேண்டியது.

தாய்மொழி மூலம் எல்லாத் துறைகளிலும் பல்கலைக் கழகப் படிப்பு இறுதியாண்டு வரை தாய்மொழி மூலம் புகட்டப்பட வேண்டுமென்ற சட்டம் கொண்டு வரப்பட்டதும், தாய்மொழி மூலம் கல்வி கற்றவர் பல்கலைக்கழகத்திற்கு வரும்போது தமிழ்மொழி மூலம் கல்விப்புகட்டப்பட வேண்டுமென்ற கொள்கையை ஆதரித்ததோடு அதனைச் செயற்றிட்டம்மூலம் வழி நடத்த முயன்றவர் பேராசிரியர் வைத்திய கலாநிதி சின்னத்தம்பி அவர்கள். ஆனால் அவர்கள் தமிழிலே இயற்றிய மருத்துவ நூல்களும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்த நூல்களும் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற காலத்திற்குப் பின்னரே வெளி வந்தவையாகும்.

இவற்றில் முதலாக வெளிவந்தது 'மகப்பேற்று மருத்துவம்' என்னும் நூலாகும். இது 1969 ஆம் ஆண்டில் வெளியானது. "மகிழ்ச்சியுடனும் அன்புடனும் கல்வி புகட்டிய எண்ணற்ற மாணவர் கூட்டத்தினருக்குப் பெருமையுடன் அரும் பெரும் பணியாக இந்நூலை உரித்தாக்குகின்றேன்." என நூலின் நுழைவாயிலில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் மகப்பேற்று நலம்பேணிகள், பல்கலைக்கழகப் பட்டதாரிகள், மாணவர்கள், இளம் மருத்துவர் ஆகியோர் மகப்பேற்றுக் கலையை இலகுவில் அறிந்து கற்பதற்கு மிகவும் பயனுடையதாக் அமைந்தது. இலங்கையிற் காணப்படும் மருத்துவ நிலையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூலில், இக்கலையை இருபத்தைந்து



ஆண்டுகளுக்கு மேலாகப் பயின்றும், மாணவர்களுக்குக் கற்பித்தும் பெற்ற அனுபவ அறிவைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. மிகத் தெளிவான முறையில் யாவருக்கும் விளங்கக் கூடிய வகையிற் பிள்ளைப்பேறு வைத்தியம் பற்றி விரிவான ஓர் அரிய நூலைத் தந்திருக்கின்றார். 456 ஆம் பக்கத்திலிருந்து 482 ஆம் பக்கம் வரை கலைச் சொற்றொகுதி என்ற பகுதியிலே தமிழ்க் கலைச்சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்கள் தரப்பட்டுள்ளன.

'நலப் பேணல் விஞ்ஞானம்' (Text Book of Nursing) என்ற நூல் 21-11-1972ல் ஊற்றுப் பிரசுர மருத்துவ வெளியீடாக அச்சில் வந்தது. 'நான் பயின்ற இலங்கைப் பல்கலைக்கழகக் காவறைகளிலும் அறுவையறைகளிலும் நலம் பேணற் கலையைப் பயின்ற எண்ணற்ற நலம்பேணும் அக்கா மாருக்கும், காவலாளிகள், செவிலிகள் ஏனைய நலம் பேணிகளுக்கும் உடல் நலம் பேணப்படும் பிணியாளருக்கும் இந்நூலை உரித்தாக்குகின்றேன்" என அவர் நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

"சென்ற 50 ஆண்டுகளுள் நலம் பேணற் கலையைப் போதிப்பதிலும் அதைப் பயில்வோரிலும் பல மாற்றங்களை நான் கண்கூடாகக் கண்டுள்ளேன்.

கொழும்பு மாபெரும் பிணி தீர்மனையில் நலம்பேணலைப் புகட்டியவரும் பயிற்றியவர்களும் ஆங்கில நலம் பேணல் அம்மாமார் அக்காமாரே. பலவகை நோயாளரைப் பேணியதொடல்லாமலும், காவறைத் தூய்மையையும் விதிகளுக்கடங்கத் திறம்படப் பேணியோருள் பெரும்பாலானோர் ஐரோப்பிய அம்மாமார் அக்காமார். இவர்கள் தம் கலையைத் திறம்படப் பயின்றவர்கள். பிறர்க்குப் பயிற்றியவர்கள், ஆங்கிலத்திற் பயிற்சி பெற்றவர்கள்.

1935 தொடக்கம் இலங்கைப் பெண்களும் அக்காமாரால் பயிற்றப்பட்டனர். இவர்களே ஆங்கில அக்காமாருடன் தோளொடு தோள் நின்று கலையைத் திறம்பட வளர்த்தவர்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் நலம்பேணல் தனியொரு விஞ்ஞானத் துறையாக இலங்கை அக்காமாரால் போதிக்கப்பட்டு வருகின்றது. பெண்கள் பலர்

இக்கல்வியை இப்பொழுது பயின்று வருகின்றார்கள். ஆயினும் இவர்களுட் பலர் அடிப்படை விஞ்ஞான அறிவு மிகவுறப் பெறுதவர்கள்.

இப்பொழுது பொதுத்துறை தனியார் துறை பிணிதீர் மனைகள் பெருகியுள்ளன. நலம் பேணற்கலை பயிலக் கல்லூரியிற் சேர்பவர்களும் தாய் மொழியிற் கல்வி கற்றவர். இப்பொழுது கல்வி புகட்டலும் தாய் மொழியிற்றான் நடைபெறுகின்றது. எனவே தமிழ் மொழியிற் கல்வி பயில்வார் குறையை எப்படித் தீர்க்கலாமென எண்ணினேன். தமிழ் மொழியில் நலம்பேணற்கலை நூல்கள் இல்லையென்பதை உணர்ந்தேன். முற்காலத்தில் நல்லியர் ஆங்கில நூல்களையும் மலர்களையும் வாசித்து அறிவைப் பெருக்கினர். தமிழ் நல்லியர் என்செய்வார்கள். ஒரு கால் படித்துப் பெற்ற அறிவைக்கொண்டே இறுதிக் கால வரைக்கும் இவர் தம் தொழிலை நடத்த வேண்டியுள்ளது.

தனியார் துறையில், ஒருவித அடிப்படைக் கல்வியுமில்லாது, பயிற்சி பெறுமல அனுபவம் ஒன்றின் அடிப்படையிலேயே பல இளம் பெண்கள் தொழில் புரிகின்றனர்.

தமிழ் நல்லியர் நலம் ஒன்றை எண்ணிஇவர் குறையைத் தீர்ப்பதற்கு இந்நூலை எழுதத் துணிந்தேன்" என அவர் முகவுரையிற குறிப்பிட்டுள்ளார். தாதிமார் தட்டுபாடு பெருமளவு நிலவும்இக்காலச் சூழலிலே தமிழ் மொழி மூலம் கற்று நலம் பேணற்றுறைக் கல்வி பெறுவோர்க்கு இது இன்றியமையாததொரு நூலாகும்,

ஊற்றுப் பிரசுர மருத்துவ வெளியீடு இரண்டாவதாக 1974ஆம் ஆண்டில் பிரயோக உடற்றொழியற் சொற்றொகுதி (தமிழ்-அங்கிலம்) Glossary of Technicai Terms in Applied physiology Tamil English.) அச்சிடப்பட்டது 180 பக்கங்களைக்கொண்ட இக்கலைச் சொற்றொகுதி மிகவும் பயனுள்ளதொன்றாகும்.

இதே ஆண்டிலே சாம்சன் றைற் எனும் மேனாட்டு வைத்தியரின் பிரயோக உடற்றொழிலியல் (Applied physiology ) என்ற நூலின் 12ம் பதிப்புப் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களாலே தமிழாக்கம் செய்யப்பட்டது.



இப்பன்னிரண்டாம் பதிப்பு 1971ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் இலண்டன் மிடில் செக்ஸ் பிணிதீர் மனை மருத்துவக் கல்லூரியினால் வெளியிடப்பட்டது. தமிழ் மொழி மூலம் மருத்துவக் கல்வி உட்பட ஏனைய துறைக்கல்விகளும் புகட்டப்பட வேண்டுமென்ற நியதி ஏற்பட்டகாலத்திலே பல்கலைக்கழக ஆசிரியர்கள் மருத்துவ விஞ்ஞான அறிவை ஆங்கில மொழியிலே தான் பெற்றிருந்தனர். தமிழிற் கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்குத் தமிழறிவு குறைவாக விருந்தது. இந்நிலையை ஓரளவிற்குச் சீர் செய்வதற்கு இலங்கைப் பல்கலைக்கழக முன்னைய உடற்றொழிலியல் விரிவுரையாளர்கள் சாம்சன் றைற்றின் பிரயோக உடற்றொழியல் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்துதவும்படி பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களை வற்புறுத்தினர். இது உயர் படிப்பு மாணவர்களுக்கும் மருத்துவர்க்குமான ஓர் நூலாகும். இது ஓர் அனைத்துலகத் தரம் பெற்ற நூலாகையினாலே தாம் இதிலிருந்து மாணவருக்குப் பயன்படும் முறையில் எளிதாக்கம் செய்ய முடியுமென்றும், மக்களுக்குப் பயன்படும் முறையில் எளிய நூல்களையெழுத உதவுமென்றும், தாங்களும் மாணவரும் இந்நூலை ஒரு சிறந்த மேற்கோள் நூலாகப் பயன் படுத்தலாமென்றும் விரிவுரையாளர் பலர் கூறினர். இவற்றின் விளைவாகப் பேராசிரியரின் தமிழாக்கம் 1974ஆம் ஆண்டு மாசி மாதம் வெளிவந்தது. தமிழாக்கம் செய்வதற்குப் பயன்படுத்திய கலைச்சொற்கள் இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக் கலைச் சொலாக்கக் குழுவினரால் ஆராய்ந்து தொகுக்கப்பட்ட சொற்களாகும். இந்தத் திணைக்களத்தின் தமிழ் நூற் பதிப்புத்துறையில் பல துறைகளுக்குரிய கலைச் சொலாக்கத்துறையிற் சிறப்புப் பணியாற்றிய அமரர் இ. இரத்தினம் அவர்கள் பேராசிரியரின் தமிழாக்கங்களுக்குப் பேருதவியாகவிருந்தவர்.

இந்நூல் மருத்துவர் சப்மன் வைத்திலிங்கம் அவர்களின் நினைவுப் பேருரை நடைபெற்ற நாள், 1974ஆம் ஆண்டு 24-ஆம் திகதி, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்டது. இந்நினைவுப் பேருரையை அன்று நிகழ்த்தியவரும் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களே. டானியல் சப்மன் வைத்திலிங்கம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அமெரிக்க வைத்தியப் பேராசிரியர் கிறீனின் தலைமையிலே மேற்கொள்ளப்பட்ட இரசாயன, உடற்கட்டமைப்பியல், உடற்றொழிலியல்

ஆகிய கலைகளுக்குரிய ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்தவர். 1843ஆம் ஆண்டிலிருந்து 1900ம் ஆண்டு வரை வாழ்ந்த இம்மருத்துவப் பெரியார் பல பெருமைகளுக்குரியவர். இவர் உடற்றொழிலியல் முதலாவது இலங்கைப் பேராசிரியராவார். யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிசனால் நிறுவப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் மருத்துவக் கல்லூரியின் முதலாவது இலங்கைத் தலைவராவார். ஆங்கில-தமிழ்க் கலைச் சொல்லாக்கக் குழுவின உறுப்பினர் பல மருத்துவ நூல்களைத் தமிழாக்கம் செய்தவர். இம் மருத்துவரைப் பற்றிப் பேராசிரியர் சின்னத்தம்பி ஆங்கிலத்தில் நிகழ்த்திய நினைவுப் பேருரை நூல் வடிவமாக அப்பேருரையின் பொழுது ஊற்றுப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.

பேராசிரியர் அவர்கள் இளைப்பாறி யாழ்ப்பாணத்தில் வந்து வாழுங்காலத்தில் மூன்று நூல்களை வெளியிட்டார். அதில் ஒன்றாகிய 'இளம் பெண்ணோயியல்' 1982ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் முகவுரையில் அவர் பின்வருமாறு கூறுகின்றார் "பெண்ணோயியல் என்ற சொற்றொடர் பல கருத்துக்களை அடக்கியுள்ளது. இவற்றுள் ஒரு பெண்ணை வருத்தும் பொது நோய்கள், அவற்றின் தடுப்புமுறைகள், இரசாயன மருந்துமுறைகள், அகச்சுரப்பியின் சுரப்பு மருந்து முறைகள், அறுவை வினைகள் முதலியன அடங்கும். ஆகவே பெண்ணோய் அறிவியலை இரு பாகங்களாக எழுதி வெளியிடவுள்ளேன்." அதன் முதலாம் பகுதியாகவே 'இளம் பெண்ணோயியல்' வெளிவந்தது.

பெண்ணோயியல் இரண்டாம் பகுதியாக 'மூப்புற்றோர் பெண்ணோயியல்" என்னும் நூல் 1984இல் பேராசிரியரால் வெளியிடப்பட்டது. இந்நூலில் சிறப்பாக வயது மூப்படைந்த பெண்களைப் பாதிக்கும் நோய்களைப் பற்றியும், அவற்றிற்குரிய தீர்வுகளைப் பற்றியும், விபரித்துள்ளார், கருப்பையுடல் முதலிய பகுதிகளைப் பெண்ணிற்கு உயிர்க்கெடுதியையுண்டாக்கும் கான்சர் நோய்கள் பற்றியும் அவற்றின் தீர்வுகள் பற்றியும் விபரிக்கப்படவில்லை. ஏனெனில் திடமான தீர்வும் அதன் முடிவும் செவ்விதமாக அறியப்படவில்லை.

கான்சர் நோயினைக் குணப்படுத்துவதற்கு அறுவை வினைத்தீர்வினால் பல உயிர்க் கெடுதிகளும் வேறு உடல்



நலக்குறைகளும் விளைவதனால் இத்தீர்விலும், றேடியோத் தீர்வு சிறப்பெனக் கண்டறிந்தார். அவரைப் பொறுத்தவரையில் அவர் அறுவை வினைத்தீர்வில் திறன்பட ஈடுபட்டிருந்தாலும், பின்னர் றேடியோத் தீர்வில் நல்ல தீர்வு முடிவுகளைக் கண்ணாரக் கண்டு அறிந்தபடியால் இவ்வகைத் தீர்வு முறையே சிறந்ததென அவர் கருதினார். இதற்காகிய சிறப்பு நோய் நிலையங்களையும் ஊடறியும் நிலையங்களையும் இத்தீர்வில் ஈடுபடும் வைத்திய அறிவையும் கண்டு அறிந்துதான் தமிழில் இப்பகுதிக்குரிய நூலை எழுதவேண்டும். எனவே இப்பகுதி இந்நூலில் சேர்க்கப்படவில்லை எனக் கூறியுள்ளார், நோயாளியைச் சோதித்தல் பற்றிச் சில குறிப்புக்கள் இந்நூலிற் கூறியுள்ளார்.

நோயைப் பற்றிய வரலாறு, நோயின் தோற்றுவாய்களையும்முறையீட்டின் உண்மைத் தகைமைகளையும் அறிவதற்கு ஒரு செவ்விய நிலையைப் பற்றிய தகவல் இன்றியமையாததாகும். இது பிணியாளியின் வாக்குமூலத்திலிருந்தும், சில வேளைகளில் உறவினரின் வாக்குகளிலிருந்தும், பெறப்படும். சில பெண்கள் உண்மை நிலையைப் பல்வேறு காரணங்களால் மறைத்து நோயுடன் அவ்வளவு தொடர்பில்லாத அறிகுறிகளுக்கு முக்கியம் கொடுப்பர். எனவே நோயைப்பற்றிய செவ்விய வாக்குமூலம் தேவைப்படும். தம்மாலே தரப்படும் முறையில் விளைவி நிலைமையை அறிவது நன்று என்று அவ்விவரங்களைத் தந்துள்ளார். இந்நூலை அவரே பதிப்பித்து வெளியிட்டுள்ளார். 'நச்சுப்பாம்புகளும் அவற்றின் கடிகளும் தீர்வும்' (Poisonous snake bites and their treatment) என்னும் நூல் 1983ம் ஆண்டு நவம்பர் மாதம் இவரால் எழுதப்பட்டு, காங்கேசன் துறை மருத்துவ வெளியீட்டினரால் வெளியிடப்பட்டது. இந் நூல் அட்டையில் 'அறுவை நலம் பேணற் கைநூல்' (Nursing in cperating Theatere) ஈஸ்வரி வைத்திய சாலையினரால் வெளியிடப்பட்டுள்ளதெனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலைப் பேராசிரியர் சின்னத்தம்பி எழுதினரோ என்பது அந்நூலைப் பார்த்தாற்றான் அறியமுடியும்.

இவர் இயற்றிய இன்னொரு நூல் 'The Diary of the Tamil Universisty Movement" என ஆங்கிலத்தில் ஆகஸ்ட் 1981இல் எழுதிய நூலாகும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய குறிப்புக்களைச் சேகரித்து வைத்துக் காலவரைப்படி எழுதப்பட்ட இந்நூல்

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் தமிழருக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்கு எடுத்த முயற்சிகளை உள்ளடக்கியுள்ளதாக விளங்குகின்றது. இதன் முக்கியத்துவம் பற்றித் தமிழ்ப் பல்கலைக்கழக வளர்ச்சியிற் பேராசிரியரின் பங்களிப்புப் பற்றிப் பேசும் போது கூறுவேன்.

'அமரர் பேராசிரியர்' பேரம்பலம் கனகசபாபதி அவர்களுக்கு அன்புப் படையல் என ஒரு நூலையும் 22-2-77இல் வெளியிட்டிருக்கின்றார். பேராசிரியரின் பேரபிமானத்திற்குரிவராக விளங்கியவர் கணிதப் பேராசிரியர் பேரம்பலம கனகசபாபதி அவர்கள். அவர் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தை நன்னெறிப்படுத்தி, குறிஞ்சிக் குமரன் கோயிலைக் கட்டுவித்து, திருக்குடமுழுக்கு விழாவையும் நடத்தி, அறங்காவற் குழுவை நிறுவி, கோயிலின் நிர்வாகத்தைச் சிறப்பாகச் செய்து வந்தார். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தக்ஷகாண்ட உரை வெளியீட்டு விழாவினையும் நடத்தி அரங்கேற்றம் செய்தார். யாழ்ப்பாண வளாகத்துக்கு வந்து, விஞ்ஞான பீடாதிபதியாகவிருந்து, வளாகத்தின் வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினார். இப்பணிகள் பற்றியும் அவரது பல சேவைகள் பற்றியும் விரிவாக இந்நூலிற் குறிப்பிட்டுள்ளார். இந்நூலிற் காணப்படும் சிறப்பம்சம் சமய சமூகக் கல்விப் பணிகளைச் செய்தவர்களுக்குப் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் எவ்வளவு மதிப்பளித்தாரென்பது. தக்ஷகாண்ட உரை அரங்கேற்றத்திற்குப் பேராசிரியர் கனகசபாபதி துணையாகவிருந்தபோதும், அதற்குக் கருத்தாவாகவிருந்து நூலினை வெளியிட்டு, அரங்கேற்றத்தைச் சிறப்பாக நடாத்தியவர் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள். (இது பற்றிப் பின்னர் விரிவாகக் கூறுவேன்) எப்படியிருந்தும் இவ்வரங்கேற்றத்தினைச் செய்து முடித்த பெருமை பேராசிரியர் கனகசபாபதிக்குரியது என்று குறிப்பிட்டிருப்பது பேராசிரியர் சின்னத்தம்பியின் பரந்த மனப்பான்மையையும், பெருந் தன்மையையும், அடக்கத்தினையும் எடுத்துக் காட்டுகின்றது.

'மலக்குடல் அறுவை' (Rectol Surgary) என்ற நூலையும் எழுதத் தொடங்கினார். இது முடிவு பெறவில்லையென நினைக்கின்றேன்.



கிறைஸ்மர் என்னும் அமெரிக்க மருத்துவரின் 'Integrated Anatomy' என்ற நூலையும் தமிழில் மொழி பெயர்த்ததாக அறிகின்றேன். இந்நூல் எமக்குக் கிடையாததினால் இது பற்றி ஒன்றும் கூற முடியாமலிருக்கின்றேன்.

தமிழ் நாட்டிலே தஞ்சாவூரில் நிறுவப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழில் விஞ்ஞான மருத்துவ நூல்கள் வெளியிட்டிருக்கின்றது. இப்பணியைத் தொடங்கும் போது அப்பல்கலைக்கழகத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த பேராசிரியர் ஒருவர் கலைச் சொல்லாக்கம் பற்றிப் பேராசிரியரிடம் விளக்கம் பெற விரும்பினார். அப்போது நான் அவரிடம் அழைத்துச் சென்றபோது, தனி மனிதன் ஒருவன் பாரிய அளவில் மருத்துவத்துறையிலே நூல்களை எழுதியதையும் மொழியாக்கத்தையும் கலைச் சொல்லாக்கத் தொகுதி வெளியிட்டதையும் நேரிற் பார்த்து வியந்து பாராட்டினார். அவரது ஆக்கங்களின் பிரதிகளைப் பெற்றுத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு சென்றார்.

இலங்கைத் நமிழரின் வரலாற்றிலே தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தோற்றமும் அதன் செயற்பாடுகளும், இயக்கம் மேற்கொண்ட பணிகளும் வரலாற்று முக்கியம் வாய்ந்தவை. அந்த இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராகவும், அதன் செயற்பாட்டிற் பருயபணி வகித்தவராகவும், அதன் பிரசாரக் குழுப் பொறுப்பாளராகவும் இறுதிவரை அதன் உந்து கோலாகவும், அதன் தூணாகவும் விளங்கியவர் பேராசிரியர் சின்னத்தம்பி ஆவார்.

அரசியல் ஈடுபாடில்லாத கல்விமான்களும், தொழிலதிபர்களும், அபிமானிகளும் மேற்கொண்ட தீவிர முயற்சியாக 1956ம் ஆண்டு யூன் மாதம் 6ம் திகதி தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றம் பெற்றது. தமிழ் பேசும் மக்களுக்கென்றொரு பல்கலைக்கழகம் நிறுவுதல், எல்லாத் துறைகளிலும் உயர் கல்வினயத் தமிழ் மாணவர் பெற வசதி செய்தல் என்ற இரு முக்கிய நோக்கங்களோடு நிறுவப்பட்ட இவ்வியக்கம், மாவட்டம் தோறும் பிரசாரம் செய்து, பிரதேசக் குழுக்களையும் அமைத்தது. ஏறக்குறைய மூவாயிரம் அபிமானிகள் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டனர்.

சேர். வைத்திலிங்கம் துரைசாமி இவ்வியக்கத்தின் தலைவராகப் பல்லாண்டுகள் சேவை செய்தார். சட்டக் கல்லூரியின் இளைப்பாறிய தலைவர் பிரிற்றோ முத்துநாயகம், பேராசிரியர் பி. கே. சண்முகம், ஆர். ஆர். குறெசெற் தம்பையா, பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், பேராசிரியர் அ. சின்னத்தம்பி, நீதியரசர் சிறீஸ்கந்தராஜா, வணக்கத்திற்குரிய பிதா தனிநாயகம், திரு. எம். திருச்செல்வம், எஸ். பி. வைத்திலிங்கம், டாக்டர் எஸ். சுப்பிரமணியம், ஜே. தியாகராஜா முதலியோர் துணைத்தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். பொதுக்குழுவிற் பல பேராசிரியர்களும், நீதியரசர்களும், மாணிக்க இடைக்காடரும், வழக்கறிஞர்களும், நானும் சேர். கந்தையா வைத்தியநாதனும் வேறு பல அறிஞர்களும் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டோம்.

1956ம் ஆண்டிலிருந்து இயக்கத்தின் சபையின் தலைவராக இயங்கிவந்த பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் 1962ஆம் ஆண்டுவரை சபைக்குத் தலைவராகவிருந்து அதனை வழிநடத்திச் சென்றார். இயக்கத்தின் தலைவராகவிருந்து வந்த சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள் 1962ஆம் ஆண்டு சுகயீனம் காரணமாகப் பதவியிலிருந்து விலகியபோது பேராசிரியர் மயில்வாகனம் இயக்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னணியில் நின்று, பிரசாரக் குழுத் தலைவராகவும் நிதி திரட்டும் பிரமுகராகவுமிருந்த பேராசிரியர் சின்னத்தம்பி 1962ம் ஆண்டிலிருந்து சபையின் தலைவராக இயக்கத்தினைச் செயற்படுத்தி வந்தார்.

தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவனத்தின் தொடக்க முயற்சியாக நாவலர் மண்டபம் என்ற கல்வி நிறுவனம் 1957ம் ஆண்டு யூலை மாதம் 3ந் திகதி கொழும்பில் நிறுவப்பட்டது. "இது தான் இலங்கையில் உருவான முதல் தமிழ்ப் பல்கலைக்கழகமாகும். இலண்டன் பல்கலைக்கழகம் இதை உயர் கல்விக் கூடமாகக் கணித்தது. இங்கு இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல், தூயகணிதம், பிரயோக கணிதம் போன்ற அறிவியற் பாடங்களுடன் கலைத்துறைப் பாடங்களும் போற்றப்பட்டன. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை, விவசாயத்துறை, கலைத்துறை ஆகியவற்றிற்கு இந்நிறுவனத்தி



லிருந்து பல மாணவர் நுழைவு பெற்றனர். இலண்டன் நிறுவனங்கள் நடாத்திய கணக்காளர் தேர்வு, பொறியியற் பரீட்சை ஆகியவற்றிற்கும் மாணவர் பயிற்றப்பட்டனர்" என்று The World of Learning என்ற சஞ்சிகை குறிப்பிட்டதிலிருந்து நாவலர் கழகம் ஆற்றிய பணியின் சிறப்பை அறிய முடிந்தது.

தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் திட்டங்களைத் தயாரித்துப் பேராசிரியர் மயில்வாகனம் தலைமையிலே நாவலர் கழகத் தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன், பேராசிரியர் அ. சின்னத்தம்பி உட்படப் பல பேராசிரியர்களைக் கொண்ட குழு பிரதம மந்திரி பண்டாரநாயக்காவைக் கண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றி 1957ம் ஆண்டிலிருந்து பல தடவை சந்தித்துப் பேசியபோதும் பயன ஒன்றும் கிட்டவில்லை, 1958ம் ஆண்டு நியமிக்கப்பட்ட நீடாம் ஆணைக்குழு முன் மனு சமர்ப்பித்தபோதும் அக்குழுவின் ஓர் உறுப்பினரான எல். ஜே. டி. செனிவிரத்தின ஆணைக்குழுவின் ஆலோசனைகளை ஏற்க மறுத்ததனால். ஆணைக்குழுவின் ஆலோசனைகளினாலே இயக்கத்தினருக்குப் பயன் ஏற்படவில்லை.

1958ம் ஆண்டிலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் தீவிரமாகச் செயற்பட்டது. 1959ம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி திருகோணமலையிலே தமிழ்ப் பலகலைக் கழகத்தின் அடிக்கல் நாட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. அதிற் பல இன மத மக்கள் கலந்து கொண்டனர். இவ்வைபவத்திற் கலந்து கொண்ட மலையக மக்கள் தலைவர் சௌ. தொண்டமான் அவர்கள் தனது பேச்சிற் பின்வருமாறு குறிப்பிட்டார். 'இந்நாள் தமிழ் பேசும் மக்கள் சரித்திரத்திற் பொன்னான நாளாக மட்டுமல்லாது அறிவு பெறும் நோக்குடைய இலங்கை மக்கள் யாபேரினதும் நன்னாளாகும். மிக விரைவில் எமது தமிழ் மொழி இந்நாட்டில் மீண்டும் அரசகரும மொழியாகுவதைக் காணத்தான் போகின்றோம், இன்றைய அரசு கடந்த மூன்று வருடங்களாக எமது மொழியை நிராகரித்து ஒதுக்கி வைத்திருந்தாலும், எம்மிடம் அரசியற் கருத்து வேறுபாடுகள் இருப்பினும், நாமெல்லோரும் இக்கைங்கரியத்தை முழுமைப்படுத்துவதில் ஒருங்கு சேர்ந்து உழைக்கவேண்டும். இரண்டு வருடங்களுக்குள் பல்கலைக் கழகத்திற்கு அடி கோலுவதில் வெற்றிகண்டு விட்டோம். இதை உடனடியாகக் கட்டியெழுப்பிப் பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவேண்டும்.'

இக்கால கட்டத்தில் இந்து சமய கலாசாரப் பல்கலைக்கழகக் கல்லூரியொன்று நிறுவப்படவேண்டுமென்று புதியதோர் கோரிக்கை திரு சு. நடேசன் அவர்களால் முன் வைக்கப்பட்டது. இது தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாகவிருந்தது

பண்டாரநாயக்கா அகால மரணமடைந்தபின், பிரதமரான தகநாயக்காவையும், அவரைத் தொடர்ந்து பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்துத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு ஒழுங்கு செய்து தரும்படி பல்கலைக்கழகத்தினர் சமர்ப்பித்த மனுக்களும் வெற்றி பெறவில்லை. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இரு கட்சிகளிடையே ஏற்பட்ட பிளவினைச் சிங்களப் பேரினவாதிகள் நன்கு பயன்படுத்தித் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பதற்குச் சட்டப்படி ஏற்பாடு செய்யாது ஏமாற்றி விட்டனர், தமிழ்ப்பல்கலைக் கழகத்தினர் கோரிய பல்கலைக்கழகம் 1960ஆம் ஆண்டு அரசின் சட்டப்படி நிறுவப்பட்டிருந்தால் இன்றைய நிலை எமக்கு ஏற்பட்டிருக்காது. தமிழரின் ஒற்றுமையீனத்தை அரசு பயன்படுத்தி இயக்கத்தினரின் கோரிக்கையைத் தட்டிக் கழித்தாலும், அவ்வியக்கத்தினரின் தொண்டு, இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியிலே, அவர்களின் பங்களிப்பினை எடை போட உதவும் கருவியாக அமைந்து விட்டது.

இந்த இயக்கத்திற் கடைசிவரை பின்வாங்காது நின்று அதனைத் தாங்கி நின்ற பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது முதலாவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞான கலாநிதி என்ற கௌரவப்பட்டத்தினை வழங்கியது பொருத்தமாகும். அப்பட்டத்திற்கு அவரை அறிமுகப்படுத்திய அவரது அபிமானத்திற்குரிய மாணவரும், யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் முதலாவது மகப்பேற்று மாதர்நோய் மருத்துவப் பேராசிரியருமான ப. சிவசூரியா அவர்கள், தமது குருவை அறிமுகம் செய்யும்போது மகப்பேற்றுமாதர் நோய் மருத்துவத்துறைகளில் இவரின் சாதனைகளையும் பங்களிப்பினையும் கௌரவிக்கு முகமாகப் பிரித்தானிய மகப்பேற்று மாதர் நோய் வைத்தியல் மருத்துவத் துறைகளில் இவரின் சாதனைகளையும் பங்களிப்பினையும் கௌரவிக்கும் முகமாகப் பிரித்தானிய மகப்பேற்று மாதர்



நோய் வைத்தியல் மருத்துவக் கல்லூரி 1958ம் ஆண்டு இணையுரிமைப் பரிசிலை இவருக்கு வழங்கியதனைப் பெருமையுடன் எடுத்துக் கூறித் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கப் பாதுகாவலராகிய பேராசிரியருக்கு இப்பட்டத்தினை வழங்குமாறு கேட்பதிலே தாம மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார். 1980ம் ஆண்டு செப்ரெம்பர் 13ம் நாளில் நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழாவிலே தமிழ்ப் பல்கலைக்கழகச் சங்கத்தின் தலைவரும், தூதுக் குழுக்களின் தலைவரும், அறிக்கைகளைத் தயாரித்தவருமாகிய பேராசிரியர் ஆறுமுகம் விசுவலிங்கம் மயில்வாகனம் அவர்களுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விஞ்ஞானக் கலாநிதிப்பட்டத்தினை வழங்கியதிலிருந்து தமிழர்களின் பல்கலைக்கழக அமைவுக்குத் தொண்டாற்றிய இருவரின் பங்களிப்பிற்கும் மதிப்பளித்தமை புலனாகின்றது.

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராகவிருந்த காலத்தில் மருத்துவத்துறை இந்து மாணவரைக் கல்வித் தொண்டிலும் வழிநடத்தியமை சிறப்பாகக் குறிப்பிடவேண்டியது. தமிழ் பேசும் மக்கள் ஈழத்திலே பல நூற்றாண்டுகளாகப் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பகுதிகளுள் வடமேற்குப் பகுதியும் ஒன்றாகும், நீர்கொழும்பு தொடக்கம் புத்தளம் வரையுள்ள நிலப்பரப்புப் பழங் காலத்திலே தமிழ் இந்துக்கள் வாழ்ந்த பகுதியாகத் திகழ்ந்தது. பண்டைக் காலத்திலே இந்நிலப்பரப்பிலே தமிழ் முழங்கிக்கொண்டிருந்தது. மேன்மைகொள் சைவ மதம் பொதுமக்கள் சமயமாகவிருந்து வந்தது. காலக்கிரமத்தில் இப்பகுதியில் வாழும் மக்கள் சிலர் தம் மதத்தையும் மொழியையும் மாற்றி அமைத்துக்கொண்டபோதும், இன்றும் ஆங்காங்கு பலவிடங்களிலே தனித் தமிழ்க் கிராமங்களையும் இந்துக்கிராமங்களையும் காணலாம்.

இப்பகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையை உருப்படுத்தியது, சிலாபத்திலுள்ள முனீசுவரம் என்னும் கோயிலாகும். இக்கோயிலைச் சேர்ந்த பூமிகள் அறுபத்துநான்கு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கிராமத்தினரும் செய்ய வேண்டிய கடமைகள் விதிக்கப்பட்டன. இதன்படியே சிலாபத்தில் மேளகாரரும் தேவ தாசிகளும் கோயிற்பணி செய்து வந்தனர்.

மருதங்குளத்தில் அகம்படி வேளாளர் பூவகை, மாவிலை, தென்னம்பூ முதலியன கொடுத்தும், வேறு கோயிற் பணி செய்தும் வந்தனர். ஒவ்வொரு கிராமத்து மக்களும் செய்து வந்த பணிகளைத் தோம்புகளிற் காணலாம்.

கோயிலின் இராப்பூசை முடிந்த பின்னர் நாடக பூசை நடைபெறும. கோயில் முன்றலிற் கூடியிருக்கும் நூற்றுக்கணக்கான மக்கள் முன்னிலையில் விடியும் வரை கூத்துக்கள் ஆடுவர். இந் நாட்டுக் கூத்துக்கள் அன்று நடைபெற்றுக் கொண்டிருந்தன. இன்றைய நிலை தெரியவில்லை.

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் கொழும்புப் பல்கலைக் கழக இந்து மாணவர் உதவியுடன் சிலாபத்தில் முந்தல், குசலை, பருதங்குளம் முதலிய இடங்களிற் சைவப் பாடசாலைகளை நிறுவி அப்பகுதிகளிலே சைவமும் தமிழும் மறையாதிருக்க முயற்சிசெய்தார். அவர் இப்பாடசாலைகள் பற்றி எனக்கு எழுதிய கடிதங்கள் பல என்னிடம் உண்டு. அவற்றை உடனடித் தேவைக்குத் தேடியெடுப்பது கஷ்டமாகவிருந்தது. அவற்றுள் ஒன்று தற்செயலாகக் கிடைத்தது. அது 28-7-84ல் எழுதிய கடிதம். குசலையில் இராஜகதழுவை என்னும் இடத்திலிருந்து 26-7-64ல் அவருக்கு அவர் நிறுவிய குசலை சைவப் பாடசாலை அதிபர் பசுபதி என்பவர் எழுதிய கடிதத்திற்பின் புறத்திற் சிவப்பு மையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார் இதனாற் பசுபதி அவர்கள் பேராசிரியருக்கு எழுதிய கடிதத்தையும் படிக்கக் கூடியதாகவிருந்தது. அதில் ''மனேசர் ஐயா அவர்கள் யாழ்ப்பாணம் சென்றபொழுது இங்கு வந்து ஆசிரியர் எல்லோரையும் சந்தித்துச் சென்றார்'' என்று எழுதப்பட்டிருந்தது. இதிலிருந்து இவர் நிறுவிய சைவத்தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஒரு மனேசரையும் நியமித்திருந்தார் என்று அறியக் கூடியதாகவிருந்தது. குசலைப் பாடசாலையிற் படித்த கனகசபை என்னும் மாணவன் பேராதனையிற் பல்கலைக்கழகத்திற் தமிழ் மூலம் தமிழ் மாணவர் புகுமளவிற்குக் கல்வித் தரம் உயர்ந்திருந்ததென்றும் தெரிந்தது. தாங்கள் நாட்டுக்கூத்தை மேடையேற்றியபோதும், அதற்கு வரவேற்பில்லையென்றும், நான் பல்கலைக்கழக மாணவரைக் கொண்டு அரங்கேற்றிய நாட்டுக்கூத்தினை அங்கு கொண்டு வந்து மேடையிட்டுக் காட்டினால், தாங்களும் நாட்டுக்கூத்துக்குப் புது



மெருகூட்டி, மக்களைக் கவரச் செய்யலாமென்றும் எழுதியிருந்தார். அதனாலேயே பேராசிரியர் அக்கடிதத்தை எனக்கு எழுதி, ஆவன செய்யும்படி பணித்தார். ஆனால் நாங்கள் அரங்கேற்றிய நாட்டுக்கூத்துக்களை அங்கு மேடையிட முடியவில்லை. இதனை அறிந்த பேராசிரியர் என்னை ஒரு நாள் பேராதனையிலிருந்து கொழும்புக்கு அழைத்து, உங்கள் நாட்டுக்கூத்தை அங்கு கொண்டு செல்ல முடியாவிட்டால், நீங்கள் அங்கு சென்று, அவர்களின் நாட்டுக்கூத்துக்களைப் பார்த்து ஒலிப்பதிவு செய்து வாருங்கள் என்று சொல்லி, தனதுசெலவில் ஒரு வாடகை மோட்டார் வண்டியும் ஒழுங்கு செய்து, மருதங்குளத்திற்கு அனுப்பி வைத்தார். நான் பருதங்குள நடிகரைக் கொண்டு கூத்து ஆடவைத்து, ஒலிப்பதிவு செய்து வந்தேன். அவர்களின் ஆட்டம் மட்டக்களப்பு யாழ்ப்பாணம் போன்ற பிற பகுதி ஆட்டத்திலிருந்து சிற்சில துறைகளில் வேறுபாடுடையதாகக் காணப்பட்டபோதும், பெரும்பாலும், ஏனைய பகுதி ஆட்டத்தையொத்திருந்தது. இந்நாடகங்கள் இப்பொழுது மருதங்குளத்தில் ஆடப்படுகின்றனவோ தெரியவில்லை. இவற்றை ஒளிப்பதிவு செய்ய எனக்குதவிய பேராசிரியருக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

பேராசிரியரின் வழிநடத்தலில் வடமேற்கு மாகாணத்திற் சமயத்தொண்டும் கல்வித்தொண்டும் செய்து வந்த கொழும்புப் பல்கலைக் கழக இந்து மன்ற மாணவர் மருதங்குளம், குசலை, நாயக்கர்சேனை, உடப்பு, முன்னீசுவரம் ஆகிய இடங்களில் நாட்டுக்கூத்துக்களை அரங்கேற்றி வந்த காலத்தில், வீடு வீடாகச் சென்று கூத்து ஏட்டுப் பிரதிகளையும் சேர்த்துப் பேராசிரியரிடம் கொடுத்தனர். மட்டக்களப்பில் ஆடப்படும் அலங்கார ரூபன் என்னும் தென்மோடி நாடகத்தை ஏட்டிலிருந்து 1962ம் ஆண்டு நான் அச்சிட்டு வெளியிட்டது பேராசிரியருக்குத் தெரியும். எனவே சிலாபப் பகுதியில் மருதங்குளத்திற் கிடைத்த 'மார்க்கண்டன் நாடகம்' 'வாளபிமன் நாடகம்' என்னும் இரு நாடகங்களின் எட்டுப் பிரதிகளையும் என்னிடம் தந்து, அவற்றை வெளியிடும்படி கேட்டார். நான் அப்போது நாட்டுக்கூத்து அரங்கேற்றத்தில் ஈடுபட்டிருந்ததனால், இதனை எனது மாணவனும் என்னுடன் சேர்ந்து நாடகப் பணியாற்றி வந்தவருமாகிய இப்போது பேராசிரியராகக் கடமையாற்றும் சிவத்தம்பியிடம் கொடுக்கும் படியும், நான் அதனை மேற்பார்வை செய்து, நூல்

களுக்கு முன்னுரை கொடுப்பேன் என்றும் கூறியதற்கமைய, சிவத்தம்பியிடம் ஏடுகள் ஒப்படைக்கப்பட்டு இவ்விரு நாடகங்களும் 1963ம் ஆண்டு பிற்பகுதியில் நூல் வடிவாகச் சிவத்தம்பியினுல் பதிப்பிக்கப்பட்டன. இவ்விரு நூல்களையும் சேர்த்து வெளியிட்டவர்கள், இலங்கைப் பல்கலைக்கழக வைத்தியப் பகுதி இந்து மாணவர் சங்கத்தினர். ஆனுற் பணவுதவி செய்து இதனைச் செயற்படுத்தியவர் பேராசிரியர் சின்னத்தம்பி ஆவார்.

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் செய்த மகத்தான தொண்டுகளிலொன்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் கந்தபுராணம், தக்ஷகாண்ட உரையைப் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தினைக் கொண்டு வெளியிட்டதாகும். பண்டிதமணி அவர்களைப் பேராசிரியர் 1957ம் ஆண்டு தான முதன் முதற் சந்தித்தார், அதுவும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பிரசாரக் கூட்டம் ஒன்றில 1959ம ஆண்டிற் பண்டிதமணி வெளியிட்ட கருத்துக்கள் பேராசிரியரைக் கவர்ந்திருந்தன. 12-12-1959இல் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சங்கக் கூட்டத்திற் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பேசும்போது, தமிழ் பேசும் மக்களுக்குத் திருகோணமலையை மையமாகக் கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமென்றும், நடேசன் அவர்கள் உண்மையிலேயே இந்துப் பல்கலைக்கழக மொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவ எண்ணியிருந்தால் பல்லாண்டுகளுக்கு முன்பே பரமேசுவராக் கல்லூரியில் அதனை நிறுவியிருக்கலாமென்றும், அதனைச் செய்யாது இன்று பரமேசுவராக் கல்லூரியை இந்துப் பல்கலைக்கழகம் நிறுவும் பொருட்டு அரசாங்கத்திற்குத் தாரை வார்த்துக் கொடுப்பதைத் தாம் விரும்பவில்லையெனவும் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார். இதனைப் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் தமிழ்ப் பல்கலைக் இயக்கம் பற்றிய தமது நூலில் 117ம் பக்கத்திற் குறிப்பிடுகின்றுர்.

பண்டிதமணியின் இக்கருத்துக்களை நன்குணர்ந்திருந்த பேராசிரியரை 1966ம் ஆண்டு நான்கு பண்டிதர்கள் சந்தித்து, பண்டிதமணியின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்பொழுது பண்டிதமணி அவர்கள் தாம் எழுதி வைத்திருந்த தக்ஷகாண்ட உரையைக் காட்டினர்.



இதனைத் தொடர்ந்து இவ்வுரையினை அரங்கேற்றும் முயற்சியிற் பேராசிரியர் ஈடுபட்டார். பண்டிதமணியின் உரையை அச்சேற்றி, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் என்றும் நிகழாத பெருவிழாவினை இந்து மாணவர் சங்கம் மூலம் எடுத்து, நூலை அரங்கேற்ற முன்வந்தார். தக்ஷகாண்ட உரையை விரைவில் அச்சிட்டு, தமிழர் செங்கோலோச்சிய கண்டிமாநகரத்திலே, பல்கலைக்கழகம் அமைந்த பேராதனையில், அரங்கேற்றத்தை நடத்தி வைத்தார். அந்நூலை ஆனையிலே ஏற்றிச் சிறுப்பர் கனகராசா ஆனையில் மேலிருந்து இரு கைகளிலும் ஏந்திவர, தேவார வேத பாராயணத்துடன் மங்கள வாத்தியங்கள் முழங்க, கல்விமான்கள் சூழ, தமிழ் நடை நடத்து பண்டிதமணி அவர்கள் அரங்கில் வந்து அடைந்தார். அதன்பின் அரங்கேற்றம் பெரும் விமரிசையாக நடைபெற்றது. கிருஷ்ணனந்த சிவத்தின் தலைமையிற் பேராசிரியர் சின்னத்தம்பியின் வழிநடத்தலில் தக்ஷகாண்ட உரைக்கு இந்து மாணவர் மன்றத்தினர் தாம் எடுத்த விழாவை முருகனுக்கு எடுத்த விழாவாக எண்ணி உற்சாகம் கொண்டனா இதனுற் கோயிலுக்கு ஆதரவாளர் பெருகினர். பணம் ஏராளமாகக் கிடைத்தது. ஓராண்டு காலஎல்லையில் ஓர் அழகான குறிஞ்சிக்குமரன் கோயில காட்சியளித்தது. இந்த நல்விளைவுக்குக் காரணமாக இருந்தவை தக்ஷகாண்ட உரையும் அதனைப் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் நூலாக அச்சிட்டு அரங்கேற்றிய முயற்சியுமாகும்.

தக்ஷகாண்ட உரைநூல் முகவுரையின் இறுதியிற் பண்டிதமணி பின்வருமாறு குறிப்பிடுகின்றுர். "இபபதிப்பின் உயிர்நாடியாக அமைந்தவர் பேராசிரியரும வைத்திய கலாநிதியுமான திரு. அ. சின்னத்தம்பி அவர்கள் அவர்களின் வளளன்மை வான் சிறப்பைச் சேர்ந்தது", சில ஆண்டுகளுக்கு முன்னர் திருநெல்வேலிக்கு இலக்கிய கலாநிதி பண்டிதமணியைக் காணச் சென்றபோது மூன்று சில்லுவண்டியொன்றையும் அவருக்குப் பேராசிரியர் அன்பளிப்புச் செய்தார். அந்த மூன்று சில்லு வண்டியில், பண்டிதமணியின் இல்லத்திற்குப் பக்கத்திலுள்ள மண்டபத்திற்குப் பண்டிதமணியை நாங்கள் அழைத்துச் சென்றதே நான் பண்டிதமணியை இறுதியாகக் கண்ட காட்சி,

பழமையிற் பொலிந்து விளங்கிய அறிஞரைக் கௌரவித்தது போலப் புதிய துறைகளில் ஈடுபட்ட எழுத்தாளரையும் ஊக்குவித்தார். 'பா' என்ற நூலை எழுதிய எழுத்தாளருக்குப் பெருங் கல்விமான்கள் சமுகமளித்த நூல் வெளியீட்டு விழாவிற் ''பாவலன்'' என்ற பெயரை யழங்கும்படி பணித்தார். அவரின் வேண்டுகோளுக்கிணங்கப் 'பாட்டு' என்ற சிறு நூலை எழுதிப் பேராசிரியரின் ஆசிர்வாதத்தைப் பெற்றதுமன்றி யாழ் இலக்கிய வட்டத்தினாற் சிறந்த சிறுவர் நூல் எனக் கணிக்கப் பெற்றுப் பரிசிலும் பெற்றார். அந்நூலாசிரியர் பேராசிரியரின் மறைவின் பின் பத்திரிகையிற் பாவலன் 'தமிழறிந்த சின்னத்தம்பி' என்ற தலைப்பில் எழுதிய அஞ்சலிக் கட்டுரையிற் பேராசிரியரின் இச்சிறந்த பண்பைப் பயபக்தியுடன் சுட்டிக் காட்டிச் சென்றிருக்கிறார்,

பேராசிரியருக்கும் எனக்குமிடையே ஏற்பட்ட தொடர்பு 40 ஆண்டுகளுக்கும் மேலானது. என்னை ஆளாக்கிய ஆசான் பேராசிரியர் கணபதிப்பிள்ளை மூலமே முதலிலே தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் இருவரும் குழந்தை மனம் படைத்தவர்கள். சூதுவாதறியாதவர்கள், எளிமையான வாழ்க்கையை நடத்தியவர்கள், பெரிய பதவிகளை வகித்த போதும் தமது பண்பை மறவாதவர்கள். தமது மாணவர் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள். பேராசிரியர் சின்னத்தம்பி, பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களைப் பார்த்து, அவரது பேச்சுத் தமிழைச் சுவைத்தவர். இதனால் எனக்கும் அவருடன் நெருங்கிய தொடர்பேற்பட்டது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இயக்கத்தில் நாமிருவரும் சேர்ந்து உழைத்தவர்கள். 1956ம் ஆண்டிலிருந்து பிரசாரக் கூட்டங்களுக்கு அழைத்துச் சென்று பேச வைப்பார். நான் எழுதிய நூல்களையும் கட்டுரைகளையும் தவறாது படித்து என்னை ஊக்குவிப்பார். எனது எழுத்துநடை அவருக்குப் பெரிதும் பிடிப்பானது. நான் அரங்கேற்றிய நாட்டுக் கூத்துக்களைப் பலதடவை பார்த்துப் பரவசம் அடைந்தவர். விபுலானந்த அடிகள் மத்திய மாகாணத்தில் நிறுவிய சைவமகாசபையின் தலைவராக நான் கடமையாற்றிய காலத்திற் அச்சபையின் நிகழ்ச்சிகள் பலவற்றிற் கலந்து, 1975ஆம் ஆண்டு பொன்விழாவைக் கொண்டாடிய போது வாழ்த்தியவர். பலமுறை பேராதனையிலுள்ள எனது இல்லத்திற்கு வந்து எனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் அளவளாவிப் பேசிச் செல்வார்.



1974ம் ஆண்டில் உலகப் பிரசித்தி பெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மகாநாட்டினை அரசின் தடைகளுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் நாம் யாழ்ப்பாணத்தில் நடத்தியபொழுது, பல தமிழ்ப் பெரிய 'புள்ளிகள்' ஒதுங்கி நின்றனர். பேராசிரியர் சின்னத்தம்பி தொடக்கத்திலிருந்து பேராதரவு தந்து மகாநாடு தொடங்கி முடியும்வரை எம்மோடு உழைத்தவர். மகாநாட்டின் இரு குழு அரங்குகளுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பாக நடத்தியவர்.

மட்டக்களப்பிற் பிராந்திய தமிழாராய்ச்சி மகாநாட்டினை 1976ம் ஆண்டு நாம் நடாத்தியபோது, அம் மகாநாடு முடியும்வரை அங்கு வந்து தங்கி ஊக்கமளித்தவர்.

நான் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டபோது, என்னைப் பலபடி வாழ்த்தி, ஆசி வழங்கியவர். யாழ்ப்பாணத்திற் குடிகொண்டு அங்கு தனியார் மருத்துவமனைகளிற் சிகிச்சை செய்யும்போது. காங்கேசன்துறை டாக்டர் இராசேந்திரனின் மருத்துவ மனைக்குச் செல்லும்போது, அல்லது அங்கிருந்து திரும்பிப்போகும்போது வழியில் என் வீட்டிற்கு வந்து போவார். நானும் அவரைப்பிரவுண் றேட்டிலுள்ள அவரது இல்லத்திற்குச் சென்று சந்திப்பதுண்டு. அப்போதெல்லாம் மனைவி பிள்ளைகள் உதவியின்றித் தனியாக எழுத்துத் துறையில் ஈடுபட்டு வந்தார். அவ்வேளைகளில் அவரைப் பார்க்கும் போது பரிதாபமாகவிருக்கும். எனினும் தனது உடல் தளர்ச்சியையும் கவனியாது எழுதிக்கொண்டேயிருந்தார்.

ஒரு முறை அவரிடம் அவரின் நூல்களை யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்புச் செய்யும்படி கேட்கச் சென்றிருந்தேன். அப்போது அவர் ''நான் கட்டியெழுப்பிய மானிப்பாய் இந்துக்கல்லூரி நூலகத்திற்குப் பல அரிய நூல்களை முன்னாள் அதிபர் முத்துவேல் மூலம் கொடுத்துவிட்டேன். ஆயிரத்துக்கு மேற்பட்ட சமய இலக்கிய நூல்களை மானிப்பாய் நகரசபை நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்து விட்டேன்'' என்று கூறினார். தான் பிறந்த ஊரிலே, தன்னை ஆளாக்கிய அன்னையின் ஊரிலே அவருக்கு மிகுந்த பற்று இருந்தது.

கடைசி நாட்களை யாழ்ப்பாணத்திலேயே கழிக்க வேண்டுமென்ற உறுதி அவரது தள்ளாத நிலையிலும் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்து, இறக்குமவரை நூலாக்கம் செய்தும் பணியில் ஈடுபடச் செய்தது எப்பொழுதும் எழுதிக்கொண்டிருந்த கைகள் இப்பொழுது ஓய்ந்து விட்டன. தமிழினத்திற்கு மருத்துவத்துறையில், தமிழ் நூலாக்கத்துறையில், சமய இலக்கிய நூல்களை வெளியிடும் துறையில், சமூகத்தொண்டில் ஈடிணையற்று விளங்கிய ஒருவரை நாம் இழந்து இன்று தவிக்கின்றோம்.

மகப்பேற்று மருத்துவ மாதர் நோய்த் துறையில் இணையற்ற நிபுணர் என்ற வகையில் அவருக்குத் தொழில் மூலம் ஏராளமாகப் பணம் கிடைத்தது. அதன் ஒரு பகுதியை மட்டும் தனக்கும் தன் குடும்பத்திற்கும் பயன்படுத்தி, பெரும் பகுதியைத் தமிழ்த்தொண்டிற்காகவும் சைவப் பணிக்காகவும செலவழித்த செம்மல் அவர்.

அவர் இறைவன் அடி சேர்ந்ததும் அவரின் பல்துறைப் பணிகளுக்கேற்ற அஞ்சலி செலுத்தப்படவில்லை. இந்த இழிவு நிலையைச் சீர செய்யும் வகையிற் கொழும்புத் தமிழ்ச் சங்கம் இந்த நினைவுப்பேருரையை ஒழுங்கு செய்திருப்பது அன்னாரின் சேவைக்கு நாம் நன்றி செலுத்தும் நன்றிக்கடனின் ஒரு துளியாகும். என்னை இந்நினைவுப் பேருரையை நிகழ்த்தும்படி கேட்டபோது முதலிலே தயங்கினேன். ஆனால் என்னோடு அன்பினாலும் தொண்டுகள் பலவற்றினாலும் இணைந்து, என் அபிமானத்திற்குரிய இப்பெருமகனின் நினைவாகச் செய்யப்பட வேண்டியவற்றிற்குக் கால்கோளாக இந்நினைவுப் பேருரை அமையலாம் என்ற நம்பிக்கையுடன் உரை நிகழ்த்த ஒப்புக்கொண்டேன். அவரின் தமையன் நாகலிங்கம் அவர்களுடன் தொடர்பு கொண்டு குடும்பத் தகவல்கள் சிலவற்றைப் பெற்றேன். பண்டிதமணியின் தக்ஷகாண்ட உரையை அரங்கேற்ற முன் வந்த அன்றைய பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத் தலைவரும், பேராசிரியரின் அபிமானியும், அவரின் நூலாக்கங்கள் பல வெளிவர உதவியவருமாகிய கிருஷ்ணானந்த சிவம் பேராசிரியரின் நூல்கள் சிலவற்றைத் தந்துதவினார். பல்கலைக் கழக நிர்வாகப் பளுவின் மத்தியிலும், நேர வசதிக் குறைவின் மத்தியிலும், இந்நினைவுப்பேருரையை என்னால் இயன்ற முறையில் அவரின் பல்வகைப்பணிகளை உள்ளடக்கக்கூடிய வகையிற் கொழும்புக்கு வருவதற்கு முதல் நாள் எழுதி முடித்தேன்.

நினைவுப் பேருரையுடன் நாம் நிறைவு பெற்றிருக்க முடியாது. அவரின் நினைவாக இரு பணிகளைத் தமிழ்ச் சமுதாயம் செய்யலாமென நினைக்கின்றேன், ஒன்று சின்னத்தம்பி நினைவுக்கட்டுரைத் தொகுதி நூல் வெளியிடுவது இதனை நினைவுத்தொகுதி நூல்களை வெளியிடுவதில் அனுபவம் உள்ளவர்களும், அவர்களின் மாணவர்களும் செய்ய முன்வரவேண்டும். அவரைப் பற்றிய தகவல்களை, அவரது பணிகளைப் பரவலாக எடுத்துக் கூறுவதாகவும், சமயம், கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் ஆய்வு நடத்துவோரின் ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கியதாகவும் இந்நூற்றொகுதி அமைதல் வேண்டும். இரண்டாவதாக நான் விடுக்கும் பணிவான வேண்டுகோள் அவரின் ஞாபகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மகப்பேற்று மாதர் நோய் மருத்துவத் துறையில் புலமைப் பரிசில் வழங்குவதற்கேற்ற மூலப்பணம் சேர்த்துக் கொடுத்தல். ஈழத்திலும் வெளிநாடுகளிலுமுள்ள அவரின் மாணவரும் அவரின் பிள்ளைகளும், அபிமானிகளும் மனம் வைத்தால் இவ்விரு நன்றிக்கடன் செயல்களைச் செய்து அவரின் நினைவு நிலைபெறச் செய்தோம் என்ற மனநிறைவு ஏற்படும் 1986ம் ஆண்டு பங்குனி சித்திரை இதழாக வெளிவந்த ஊற்று ஏட்டில். டாக்டர் கு. சுகுமார், மண்ணின் மைந்தன் என்று புகழ்ப் பெயர் சூட்டிய பேராசிரியர் சின்னத்தம்பியின் பணிகள் அவர் தம் பிறந்த மண்மேற் கொண்டிருந்த பற்று, எம்மினத்திற்கு வழிகாட்டுவனவாக அமைய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து இந்நினைவுப் பேருரையை நிறைவு செய்கின்றேன்.

★ ★ ★
★ ★
★

ரெயின்போ பிரிண்டர்ஸ் கொழும்பு-13.